ஜன விநோதினி.

இல 12. டிசேம்பர் மீ 1870. புஸ்த. I.

முயற்சி, இன்பம்; முயற்சியின்மை, துன்பம்.

மனிதர்கள் அநுபவிக்கும் சுகாசுகம் இன்பதுன்பங்களைக் கூர்ந்து கவனித்துப் பார்க்குமிடத்து, அவர்களுக்குண்டாகிற துன்பங்கள் துக்கங்கள் பெரும்பாலும் சரீரத்தை அல்லது மனதைப்பற்றிய சோம்பல் அல்லது முயற்சியின்மையினாலே உற்பத்தியாகின்றனவென்று தெளிவாய் அறிந்துகொள்ளலாம். இரத்தமானது தேகமெங்கும் யாதொரு அடங்கலின்றித் தாராளமாய் ஓடிக்கொண்டிருக்கையில்தான், தேகசுகமும் மனோ உத்சாகமும் உண்டாயிருக்கும். சரீரத்திலுள்ள ஜீரணக்கருவிகள் முதலிய பல இயந்திரங்களுக்குள் சுத்தமான இரத்தம் கதித்து ஓடிக்கொண்டுவருமானால், அக்கருவிகளின் வெவ்வேறான தொழில்கள் நன்றாய் நடந்தேறுமாகையால், சரீரத்திற்கு நல்ல சுகமுண்டாயிருக்கும். புத்திக்கு ஆதாரமாகிய மூளையில் சுத்த இரத்தம் கதித்து ஓடுகையில், மனஸ்தத்துவங்கள் கூர்மையும் சுறுசுறுப்புமுள்ளவைகளாகும்; மனோ உத்சாகமும் சந்தோஷமும் உண்டாகும். தேகத்தில் இவ்வித இரத்தச் சுற்றோட்டத்தை உண்டுபண்ணக்கூடியது முயற்சியொன்றேயொழிய வேறொன்றுமல்ல. சோம்பல் அல்லது முயற்சியின்மைக்கு ஒருவன் இடங்கொடுப்பானாகில், அது அவன் தேகத்தைப் பல சுகவீனங்களுக்கு இரையாகவும், மனதைச் சொல்லிமுடியாத வீண் எண்ணங்கள் சிந்தனைகளுக்கு அடிமையாகவும் ஆக்கி, அதினால் அவன் தனக்குத்தானே பாரமாகவும், பிறர்க்கு வெறுப்பாகவும் செய்துவிடும்.

மனிதர்களில் பெரும்பான்மையோர் மிகுந்த பிரயாசையுடன் உழைத்துத்தான ஜீவனஞ்செய்யவேண்டுமென்று கடவுள்

நியமித்திருப்பது மிகுந்த ஞானமும் நன்மையுமான ஏற்பாடே தவிர வேறல்ல. எப்படியெனில், நன்றாய்ப் பிரயாசப்பட்டு உழைக்கிற ஜனங்கள் அவ்வுழைப்பினால் ஜீவனுக்கவசியமான பொருள்களைச் சம்பாதித்துக்கொள்ளுகிறதும்தவிர, அப்பொருள்களை இன்பத்துடன் அநுபவிப்பதற்கு அவசியமான சரீரசுகத்தையும், மனச்சமாதானத்தையும் உத்சாகத்தையுங்கூடப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். மேலும் ஐசுவரியவான்களில் மிகுதியானவர்கள் செல்வத்தை அடைந்தமாத்திரத்தில் முயற்சிக்குத தங்களை வெகுதூரம் நீக்கலாக்கி, சோம்பலுக்குட்பட்டுத் தங்கள் ஐசுவரியத்தைக் கிரமத்தப்பாய் உபயோகித்துத் தங்களுக்குக் கேடு விளைவித்துக்கொள்ளுகிறபடியால், பெரும்பான்மையான ஜனங்கள் ஐசுவரியவான்களாயிராமல், பிரயாசப்பட்டு உழைத்துச் சாப்பிடவேண்டியவர்களாயிருப்பது நன்மையான காரியமென்றே நாம் நினைக்கவேண்டும். கல்விகளைக் கற்றவர்களிலுங் எத்தனையோபேர்கள் செல்வச்செருக்கினால் அநேக தாகளுக்குட்படுகிறார்கள். அவர்கள் தங்களை அடக்கவும், இச்சைகளைக் கீழ்ப்படுத்தி ஆளவும் ஏலாமல், விவேகம் குகும் வரையறைகளை அடிக்கடி கடந்து, தங்கள்மேல் பல துன்பங்களை வருவிக்கிறார்கள். செல்வவான்களில் எத்த சொல்பப்பேரைப்பற்றி இவர்கள் தங்களுக்கிருந்த திரவிய சாவகாசம் முதலியவற்றைத் தங்களுக்கு மெய்யான சமாதா சந்தோஷத்தைச் சம்பாதிப்பதிலும், மற்றவர்களுக்குத் தகு யான நன்மைகளைச் செய்வதிலுமாக உபயோகித்தார்களென்று சொல்லக்கூடியதாயிருக்கிறது. இவன் தனக்கிருந்த ஐசுவரியத்தையும் சாவகாசத்தையும் கிரமமாய் உபயோகித்து, தனக்கும் பிறர்க்கும் மெய்யான நன்மைகளைச் செய்தான் என்று ஒரு ஐசுவரியவானைப்பற்றிச் சொல்லக்கூடுமானால், ஒன்பது ஐசுவரியவான்களைப்பற்றி இவர்கள் செல்வச்செருக்குக்குரிய சந்தோஷங்களில் அமிழ்ந்து, சோம்பலிலும் வீண்வேடிக்கையான காரியங்களிலும் தங்கள் ஜீவகாலத்தை அவமாய்ப் போக்கினார்களென்று சொல்ல இடமிருக்கும். தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாக இருக்கும்பொருட்டு அளிக்கப்பட்ட உலக நன்மைகளை எத்தனைபேர்கள் அக்கிரமமாய் உபயோகித்து, தங்களுக்குத் தீராத மனவேதனைகளையும் நாநாவித சரீரதுன்பங்களையும் வருவித்திருக்கிறார்கள்?

இத்தியாதிகாரியங்களை நாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, ஐசுவரியமானது எளிய ஜனங்கள் நினைக்கிறபடி அவ்வளவு பெரிய நன்மையல்லவென்றும், மனிதர்களில் பெரும்பான்மையோருக்குச் செல்வமும மேன்மையும் ஏற்றவைகளல்லவென்றும, அவற்றைப்பார்க்கிலும், இசிவியத்திற்குரிய சாதாரண தொழிலதுறைகள், முயற்சிகள், உழைப்புகளே மிகவும் நன்மையானவைகளென்றும நாம நினைக்கவேண்டியிருக்கிறது.

பாவஞ்செய்த மனிதனுக்குத் தண்டனையாக: "நீ உயிரோடிருக்கிற நாளெல்லாம் வருததத்தோடே பூமியின் பலனைப் புசிப்பாய். உன் முகத்தின் வேர்வையால் அபபம் புசிக்கக்கடவாய்" என்று கடவுள் ஆதியில் செய்த தீர்ப்பு மகா இரக்கமுள்ள தீர்ப்பேதவிர வேறல்ல. எபபடியெனில், அத்தண்டனையினின்றே மனிதனுக்குச சுகமும் பெலனும் ஜீவனுக்குரிய இன்பங்களும் விளைகின்றன. நெற்றியினின்று வேர்வை ஒழுக உழைத்து ஜீவனஞ்செய்கிற மனிதனுக்குள்ள சுகமும பெலனும் இன்பங்களும் வேறே ஆருக்குக் கிடைக்கும்?

தேகசுகத்தை மகா பெரிய நன்மையாகப் பாவித்து அதை அடையும்படி மிகுந்த ஆவலுடன் விரும்பாத மனிதன் ஒருவனுமில்லை; ஆனால் அநேக ஜனங்களுக்குத தாங்கள் இவ்வளவாய் விரும்புகிற பொருளைத் தக்ககிரயங்கொடுத்துக் கொள்ள மனமில்லை. தேகமுயற்சி தேகசுகத்திற்கு ஆதாரம்; தேகசுகததை விரும்புகிற அநேக ஜனங்களுக்கு தேகமுயறசிசெய்ய மனமில்லை. தேகமுயற்சியில்லாவிடில் தேகசுகம் நிலைப்பது கூடாதகாரியம். ஓர் கெடியாரமானது அசைவாடிக்கொண்டிராமல் நிறுததப்பட்டிருந்தால், அது சீக்கிரத்தில் துருப்பிடிததுப் பழுதாய்ப்போவதுபோல, மனிததேகமும் போதுமான அளவு சரீரமுயற்சியற்றிருக்குமானால், அது சீக்கிரத்தில் பலவித கோளாறுகளுக்குட்பட்டுப் பலவகை வியாதிகளுக்குள்ளாகும். மேலும் நமக்குச சுற்றிலுமுள்ள சகல வஸ்துக்களும் ஓயாது அசைவாடிக்கொண்டு முயற்சியுள்ளவைகளாயிருக்கிறதைக் காணலாம். அபபடியில்லாவிட்டால் உலகத்தில் பல குழப்பங்களும் மோசங்களும் சம்பவிக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. பல காரணங்களினால் ஆகாயமானது அங்குமிங்கும் அசைக்கப்பட்டுக் காற்றுகளாய் பிறபபிக்கின்றது. அதினால் ஆகாயம் சுத்திகரிக்கப்பட்டு ஜீவஜெந்துக்கள் சுவாசிப்ப

தற்குத் தகுதியுள்ளதாகின்றது. இப்படி ஆகாயத்தில் அடிக்கடி அசைவுண்டாகாமலும், காற்றுகள் உற்பத்தியாகாமலுமிருந்தால் பெரிய மோசங்கள் சம்பவிக்கும். மேலும் சமுத்திரம் ஏரிகள் ஆறுகள் முதலியவை ஓயாமல் அசைந்துகொண்டேயிராவிட்டால், ஜலம் அசுத்தமாகிப் பெரிய தீமைகளை விளைவிக்கும். பாரி விருக்ஷங்கள் பெருங்காற்றுகளால் அசைக்கப்படுகிறதினால் அதிக பலத்தை அடைகின்றன. எவ்வளவுக்கு அவைகள்மேலே அகோரமாய் அசைக்கப்படுகின்றனவோ, அவ்வளவிற்குக் கீழே அவற்றின் வேர்கள் ஆழமாய் ஊன்றிப் பெலனடைகின்றன. இப்படிச் சகல வஸ்துக்களிலும் காணப்படுகிற இப்பிரமாணமானது மனிதன் விஷயத்திலும் பொருந்துகின்றது. தேகமுயற்சியினால் சரீரத்திற்குச் சுகமும் பெலனுமுண்டாகின்றன. முயற்சியின்மையினால் விளையும் தீமைகளோ எண்ணிறந்தவை.

இவ்வாறு முயற்சியினால் உண்டாகும் நன்மைகள் அநேகமாயிருக்க, எளியஜனங்கள் தங்கள் உழைப்புகள் முயற்சிகளினால் விளையும் பயனாகிய சுகத்தையும் இன்பங்களையும் மறந்துவிட்டு, தங்களுக்கு உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் ஐசுவரியவான்களுடைய தனத்தையும் சந்தோஷங்களையும் பார்த்து வீணாய் ஏங்குகிறார்கள். பொதுவாய் மிகுந்த ஐசுவரியத்தோடு மிகுந்த கவலைகளும் நோய்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனவென்று அவர்கள் அறியவில்லை. மிகவும் கொஞ்சதேவையுள்ளவன் மிகவும் அதிக பாக்கியவான்; அதிகம் தேவையுள்ளவன் அதிக நிர்ப்பாக்கியன். கொஞ்சம் தேவையுள்ளவன் தனக்கு அவசியமாயிருக்கும் சொல்பப்பொருள்களைச் சீக்கிரத்தில் பெற்றுக்கொண்டவுடனே திருப்தியடைந்து, அமைதலோடும் சந்தோஷத்தோடும் வாழுகிறான். ஆனால் அதிகம் தேவையுள்ள ஐசுவரியவானுக்கோ அவனுடைய ஆஸ்தி அதிகப்பட அதிகப்பட, அவனுடைய ஆசைகளும் விருப்பங்களும் குறைகளும் அதிகப்படுகின்றன. அதினால் அவன் மேன்மேலும் அதிகக் கவலைகள் சஞ்சலங்களுக்குள்ளாகி அதிக நிர்ப்பாக்கியனாகிறான். இதினால், அதிக ஐசுவரியவான்களுடைய நிலைமை அவ்வளவாய் இரசிக்கப்படத்தக்கதல்லவென்று ஏற்படுகிறது. பொதுவாய் ஐசுவரியம், அதிகாரம், மேன்மை முதலியவை எவ்வளவுக்கு அதிகப்படுகின்றனவோ, அவ்வளவுக்கு மனப்பாக்கியம் அவற்றைவிட்டுத் தூர

மாய் விலகிப்போகிறதையும், கவலைகளும் மனவேதனைகளும் நோய்களும் வந்து அவற்றோடு சோந்துகொள்ளுகிறதையும் காண்கிறோம். ஆகையால் சகலத்தையும் யோசித்துப்பார்க்குமிடத்து, ஓயாத உழைப்புகளுக்கும் வருத்தங்களுக்கும் உட்படுத்துகிற அதிவறுமையுள்ள நிலைமையும், முயற்சியின்மைக்கும் சோம்பலுக்கும் உள்ளாக்குகிற அதி ஐசுவரிய நிலைமையும் மனப்பாக்கியமுள்ள வாழ்விற்கு ஏற்றவையல்லவென்றும், நடுநிலைமையே எதற்கும் நலமானதென்றும் சொல்லவேண்டியிருக்கிறது.

மேலே சொல்லிய காரியங்களுக்கு இசைவாகப் பின்னாலே வரும் கதையைச் சொல்லுகிறோம்.

வறுமையின் புத்திரியாகிய முயற்சி என்பவள் தன் இரண்டு குமாரத்திகளாகிய சுகம் மனரம்மியம் என்பவர்களுடன், செல்வச்செருக்கு ஆடம்பரம் முதலியவையுள்ள நகரங்களுக்கு வெகு தூரத்திலுள்ள ஓர் மலையடிவாரத்திலிருந்த ஒரு சின்னக் கிராமத்தில் ஓர் சிறுகுடிசையில் அமைதலோடு நெடுநாள் வாசஞ்செய்துகொண்டிருந்தாள். அவர்கள் மூவரும் தனவான்கள், கனவான்கள், மேன்மக்கள் ஒருவரையும் சற்றேனும் அறியாதவர்கள். தங்கள் கிராமத்தில் குடியிருந்த தங்களைப்போலொத்த ஜனங்களோடுதான் அவர்கள் எவ்வேளையும் சகவாசஞ்செய்துவந்தார்கள். இப்படியிருக்குங்காலத்தில், அந்நிய நாடுநகரங்களைப்போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவர்களுக்குள் தலைப்பட்டு, உடனே தங்கள் சிநேகிதரையும் வாசஸ்தலத்தையும் விட்டுவிட்டுத் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றும்பொருட்டுப் புறப்பட்டார்கள். இப்படி அவர்கள் மூவரும் பிரயாணஞ்செய்கையில், முயற்சி என்பவள் நடுவிலும், அவளுடைய மூத்தபுத்திரியாகிய சுகம் என்பவள் வலப்பக்கத்திலும், இளையகுமாரத்தியாகிய மனரம்மியம் என்பவள் இடப்பக்கத்திலுமாக ஒன்றாய்ச் சேர்ந்து நடந்துபோனார்கள். முயற்சி என்பவள் தெளிந்தபுத்தியுள்ளவளாய் நடந்தாள். சுகம் என்பவள் அதிக உத்சாகமும் சுறுசுறுப்புமுள்ளவளாய் மகிழ்ச்சியான சம்பாஷணைகளைச் செய்துகொண்டும், சந்தோஷமான பாட்டுகளைப் பாடிக்கொண்டும் நடந்து, தன் தாயின் நடைவருத்தத்தை வெகுதூரம் நீக்கினாள். மனரம்மியம் என்பவள் சந்தோஷமும் திர்ப்தியும் இலங்கின முகத்

துடன் எவ்வேளையும் புன்னகையுள்ளவளாய்த் தன் தாயிக்குக் கைலாகு கொடுத்துக்கொண்டு நடந்தாள்.

இவ்வாறு அவர்கள் மூவரும் காடுகள், மலைகள், நாடுகள் நகரங்களின் வழியாகச் சென்று, கடைசியில் அவ்விராச்சியத்தின் ராஜதானியாகிய மிகுந்த செல்வமும் ஆடம்பரமும் நிறைந்த ஓர் பெரிய நகரத்திற்குச் சமீபித்தார்கள். அவர்கள் அந்நகரத்திற்குள் பிரவேசிக்கும் முன்னதாக முயற்சி என்பவள் தன் குமாரத்திகள் இரண்டுபேரையும் நோக்கிப்பார்த்து: "என் அருமைப் பிள்ளைகளே! நாம் இந்நகரத்திற்குள் பிரவேசிக்கையில் நீங்களிருவரும் என்னைவிட்டுச் சற்றென்கிலும் விலகக்கூடாது. என்னைவிட்டு நீங்கள் கொஞ்சமேனும் பிரியாதபடிக்கு மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் நீங்களும் நானும் பிரிவோமானால், அந்நிமிஷமே நமமூவருக்கும் மோசமும நாசமும் ஆரம்பிக்குமென்பது நிச்சயமான காரியம். நீங்கள் இதைச் சற்றென்கிலும் மறந்துவிடாமல் உங்கள் மனதில் நன்றாய்ப் பதித்துவையுங்கள்" என்றாள். ஆனால் சுகம் என்பவள் சந்தோஷ உல்லாசங்களின்மேல் நாட்டமுள்ளவளானபடியால், தன் தாய் மிகவும் வற்புறுத்திச் சொல்லிய புத்திமதிகள் அவள் காதுக்குள் அவ்வளவாய் நுழையவில்லை. பின்பு அவள் சிலதினங்களுக்குள்ளாக இச்சை என்பவனை வழியில் சந்தித்து, அவனுடைய சிநேகத்திற்குட்பட்டு, சீக்கிரத்தில் கர்ப்பந்தரித்து, வியாதி என்னும் புத்திரியைப் பெறுஞ்சமயத்தில் பிரசவவேதனையின் மிகுதியினால இறந்துபோனாள். மனரம்மியம் என்பவள் தன் சகோதரி சுகம் என்பவள் தன்னைவிட்டுப் பிரிந்துபோனபின்பு நாளடைவில் சோம்பல் என்பவனுடைய மாயவலைக்குள் விழுந்தாள். பின்பு அவள் எப்படிப்போனாளோ தெரியவில்லை. முயற்சி என்பவள் தன் புத்திரிகள் இருவரையும் விட்டுத் தனிமையாய் வாழ்வது அவளுக்குக் கூடாதகாரியமாயிருந்தமையால், அவள் தன் குமாரத்திகளைத் தேடிக்கொண்டு எங்கும் அலைந்து திரிந்து, கடைசியில் சோர்பு என்பவனால் பிடிபட்டுச் சிலநாளுக்குப்பின்பு மிகவும் நிர்ப்பந்தமாய் இறந்துபோனாள்.

வாலிபத்திற் செய்யவேண்டிய பழக்கங்கள்.

(தொடர்ச்சி.)

மூன்றுவது, விடாமுயற்சி செய்யப்பழகு.

ஒரு காரியத்தை ஆரம்பித்தால் மத்தியில் அதைக் கைசோர விட்டுப் பிறிதொன்றில் பிரவிர்த்தியாமல், எடுத்த காரியத்தைக் கடைப்பிடியாய்க் கைக்கொண்டு முயலவேண்டும். ஒரு செடியிற் றானே போதுமான தழைகளிருப்பினும், அதிற் சிறிது கடித்தமாத்திரமே விடடுக் காடெங்கும் சென்று, கண்ட செடியெல்லாம் வாய் வைத்தலையும் ஆட்டைப்போல, மாணுக்கனும் பலதுறைகளிலும், பலநூல்களிலும் சென்று, கண்டதையெல்லாம் கற்கத்துணிந்து காலம்போக்காமல், ஒரு படிப்பை ஆரம்பித்தால் அல்லது ஒரு நூலைத் தொடங்கினால் அதை நிறையக் கற்றுப் புலமை நிரம்புமளவும் விடாப்பிடியாய்ப் பற்றி முயற்சிக்கவேண்டும். எடுத்த கருமத்தை இடையில் விடாமல், அடுத்து முயன்றுலதான் எவாக்கும் காரியசித்தியுண்டாம். "இறுவனாகாறு முயல்ப" என்றார் நீதி நூலாசிரியர். "பலகால் எறும்பூரக் கற்குழியுமே" என்றார் பிறரும். ஆயினும் கல்வி கற்கபபுகும் மாணுக்கரில் அநேகர் இதைக் கவனிக்கிறதில்லை. வருஷத்துக்கொரு பாஷை, மாதத்துக்கொரு சாஸ்திரம், நாளுக்கொரு புஸ்தகம், நேரத்துக்கொரு நினைவு என்றுற்போல, திடசித்தமும் தீர்மானமுமின்றிப் பல படிப்புகளிலும் தலையிடுகிறார்கள். இன்னின்னர் இன்னின்னதைப் படித்து இன்ன பலன் அடைந்தார்களென்று எங்கேயாகிலும் வாசித்தோ, கேள்விப்பட்டோ அறிகிறார்கள். உடனே முன்பின் ஒன்றும யோசியாமல் தாங்களும் அதேபிரகாரஞ் செய்யவேண்டுமென்று நிச்சயித்து, மிகுந்த உத்சாகத்தோடு சிலநாள் அதில் முயலுகிறார்கள். அதை வெகுவாய்ப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள. பின்பு வேறு சிலர் அப்படி இப்படிசெய்து, அது இதை அடைந்தார்களென்று கேள்விப்பட்டு, உடனே முந்தின காரியத்தையும் தீர்மானத்தையும் தூர வைத்துவிட்டு, இந்த நூதனவிஷயததில் ஆவலோடு பிரவேசிக்கிறார்கள். பின்னும் சிலநாளில் வேறொரு நூதனம் வருகிறது; உடனே முந்தினதைத் தூர எறிந்துவிடுகிறார்கள். இவ்வாறே ஒன்றுபோக ஒன்றுவந்து அலக்கழிப்பதினுல், அவர்கள் சேற்

றில் நாட்டிய கம்பம்போல ஸ்திரமின்றி அலைகிறார்கள். இதனால் அவர்கள படும் பிரயாசையெல்லாம் விழலுக்கிறைத்த நீர்போல் வியர்த்தமாகிறது. ஒருவிஷயத்திலாவது தேர்ச்சியில்லை. இதற்கு ஒரு திருஷ்டாந்தமுண்டு: ஒரு மனுஷனிருந்தான், அவன் சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டிய படிப்பு முடிந்தவுடனே இலக்கிய இலக்கண ஆராய்ச்சிசெய்ய முயன்று காவியபபாடம் கேட்டுவந்தான். அக்காலத்தில் அவனுடைய யுக்திபுத்தியையும், நன்முயற்சியையும் கண்ட யாவரும் அவனை மதித்து, அவன் மகா வித்துவானாகிச் சிறந்திருப்பானென்று எண்ணினார்கள். ஆம், அவனிடத்தில்மாத்திரம் எடுத்த கருமத்தை இடையில் விடாமல் கடைபபிடித்துச் சாதிக்கிற பழக்கமிருந்திருக்குமாகில், அவன் அப்படி ஆகியிருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவன் சொற்பதினத்தில் அந்த முயற்சியைவிட்டு, யாரோ ஒருவர் சொற்கேட்டு ஜோதிடம்படிக்கத் தொடங்கினான். சிறிதுநாட் சென்றபின்பு அதையும் கைவிட்டு வைதிகநூல வாசிக்க முயன்றான். பின்னும் சிலநாளில் படிப்பெல்லாம் கட்டிவைத்துவிட்டு, உத்தியோகம சம்பாதிக்கக் கருதி, கச்சேரி காத்திருந்தான். அதுவும் கொஞ்சநாளில் வெறுப்பாய்த் தோன்ற, மறுபடியும் இலக்கணம் கற்க முயன்றான்; அதுவும் புளித்தது. அப்புறம் இங்கிலிஷ்பாஷை படிக்க ஆரம்பித்தான். இந்தப்பிரகாரம் ஒன்றிலாவது நிலைநில்லாமல், ஒரு படிப்பையாவது நிறையப்படியாமல் ஒன்றைவிட்டு ஒன்றிற் செல்லுவதிலேயே நெடுநாட் கழிந்துவிட்டபடியால், அப்புறம் அந்த மனுஷனுடைய ஸ்திதி எப்படியாயிற்றென்றால், அவன் ஒன்றுக்கும் உதவமாட்டானென்று எல்லோரும் இகழ்ந்து சிரிக்கத்தக்கதாயிற்று. ஆதலால், ஒருவன் எவ்வளவு கூரிய புத்தியும் ஓயா முயற்சியுமுடையனாயினும், அவன் ஸ்திரமான நிர்ணயமுடைய திடசித்தன் அல்லனேல், தேறினவனாதல் அரிது. ஸ்திரமில்லாத வாலிபன் ஒருநாளும் சிறந்த மாணாக்கனாகான். ஒரு காரியத்தைச் செய்ய நிர்ணயித்துச சொற்பத்தடை நேரிட்டவுடனே, அல்லது அதற்கு மாறாக ஒருவர் ஒன்றைச் சொன்னவுடனே, அந்த நிர்ணயத்தை மாற்றுகிற நிலையற்ற மனுஷனும், நாளுக்கு ஒரு யோசனையும், நாழிகைக்கு ஒரு நினைவும் நினைத்து, காற்றாடிபோல வெகு சுலபமாய் மாறுகிற மனுஷனும், தங்களுக்காவது பிறருக்காவது பெருமையும் பிரயோஜனமுமான

பெரிய காரியங்களைச் செய்துகொள்ளமாட்டார்கள். ஆனால் முத லாவதே காரியங்களை நன்றாராய்ந்து தீர ஆலோசித்து, அதன்பேரில் வழுவாத நிரணயஞ்செய்து, அப்புறம் என்னவந்தாலும் அசை யாமல், அஞ்சாமல், பின்வாங்காமல் நின்று, எடுத்தகாரியத்தைக் கடைபபிடித்துச் சாதிக்கிற பழக்கமுடைய மநுஷன் தான் எந்தத் துறையில் இறங்கினாலும், என்ன தொழிலில் பிரவேசித்தாலும் அதில் தேறிச் சிறப்பும் பயனும் அடையத்தக்கவன். "ஊழி பெயரி னும் தாம்பெயரார் சான்றாண்மைக், காழியெனப் படுவார்."

பிரகிருதத்தில் நமது தேசத்து வித்தியார்த்திகளில் பெரும் பாண்மையோர் முதல்முதல் சுயபாஷை படிக்க ஆரம்பிக்கிறார் கள். சொற்பநாளில அதைவிட்டு, இதில் என்ன பலனிருக்கி றது என்றுசொல்லி, இங்கிலிஷ் படிக்கப்போகிறார்கள். அத்து டன் லத்தீனோ, கிரீக்கோ, சமஸ்கிருதமோ படிக்கும்படி நேரிடு கிறது. அப்படி ஒருவன் படித்துக்கொண்டிருக்கையில் வேறொரு வன் வருகிறான்; அவன் இவனைப்பார்த்து: நீ ஏன் உன் காலத்தை அவமபோக்குகிறாய்? உபயோகமற்று மாண்டுபோன இந்தப் பா ஷையாற் பலனென்ன? இந்த நேரத்தை புத்திகூர்மை அடைந்து, அறிவில் தேறத்தக்க நல்ல சாஸ்திரங்களைக் கற்பதில் செலவிடலா காதா? என்கிறான். உடனே அதைப் போட்டுவிட்டுச் சாஸ்திரங் களைக் கையில் எடுக்கிறான். அப்பொழுது இன்னொருவன் வந்து: ஓய், நீ என்ன? சர்வகலாசாலையில் கணிதசாஸ்திரப்பண்டிதனாகப் போறாயோ? இதெல்லாம் படித்துத்தான் இன்னின்னார் முன்னுக்கு வந்திருக்கிறார்களோ? பாஷை ஒன்று தெரிந்தாற்போதும்; குறை யெல்லாம் அவசியமில்லையென்கிறான்; உடனே மனம் மாறிவிடு கிறது. இவ்வாறே ஒரு நிலையின்றி பலதுறைகளிற் கையிட்டு, ஒன்றிலும் பூரணப்படாமல் காலங்கழிந்துவிடுகிறது. ஒருவனுக் கிருக்கிற சகல அநுகூலங்களையும் கெடுத்தழித்து, அவனைத் தாழ்த் துகிறதற்கு நிலையற்ற குணமாகிய இது ஒன்றுமே போதும்.

இதனோடு ஒற்றுமைப்பட்ட வேறொரு தீமையுண்டு. அதென் னவெனில: இன்று செய்யக்கூடியதை நாளை செய்துகொள்ளலா மென்று தாமதிக்கிற குணமாம். இந்தக் கடிதத்துக்குப் பதில் நாளை எழுதிக்கொள்ளலாம்; அந்தக் காரியத்தைச் சற்றுப் பொறுத்துச் செய்துகொள்ளலாம்; இதெல்லாம் இப்பொழுதே செய்து தீர

வேண்டுமென்கிற அவசியமில்லை; சற்றுப் பிந்திப்போனாலும் அதனால் ஒருவருக்கும் நஷ்டம்வராது என்கிறாய். மெய்தான், நீ சொல்லுகிறபடி பிறருக்கு நஷ்டம் வராதிருக்கலாம்; ஆனாலும் இப்படிப்பட்ட துர்ப்பழக்கத்தினால் உனக்குப் பெரிய நஷ்டமுண்டாகுமென்றறிந்துகொள். எவ்வித துர்ப்பழக்கத்துக்காவது கொஞ்சம் இடங்கொடுப்பது, சத்துருவுக்குக் கோட்டையில் ஒரு தொண்டு திறந்துவைப்பதுபோலாம். ஆதலால் நாளைக்கு ஆகட்டும், அப்புறம் பார்த்துக்கொள்வோம், பின்பு செய்துகொள்ளலாமென்று காலம் நீடிக்கிற மந்தகுணத்துக்குச் சற்றென்கிலும் இடங்கொடாதே. இன்று அதற்கென்று கிடைத்த நேரத்தை விட்டு, நாளைவரும் நேரத்துக்குக் காத்திருந்தால், அந்த நேரம் வேறென்ன அலுவலைக் கூட்டிக்கொண்டுவருமோ? நீ அறியாயே. ஆதலால் இன்று செய்யக்கூடியதை இன்றே செய், இப்பொழுதே செய்; நாளை, அப்புறம் என்று வையாதே. அந்தந்த நாளுக்கும் அந்தந்த நேரத்துக்குமுரிய வேலை அந்தந்த நாளிலும், அந்தந்த நேரத்திலுமே நடக்கட்டும். இப்படி ஒழுங்காய் நடக்கிற ஒரு நாளின் வேலை ஒழுங்கின்றிச் செய்யும் ஒருவாரத்து வேலையைப் பார்க்கிலும் அதிகமாயிருக்குமென்றறிந்துகொள்.

நான்காவது, காலம் தவறாது கைக்கொள்ளப்பழகு.

எந்த வேலைக்கு எந்த நேரத்தைக் குறித்தாயோ, அந்த வேலையை அந்த நேரத்தில் செய்யத் தவறிப்போகாதே. குறித்தநேரம் தவறாமல் கைக்கொண்டு நடக்கிறது துவக்கத்தில் கஷ்டமாயினும், சொற்பநாட்பழக்கத்தினால் எவர்க்கும் அது சுளுவாய்விடும். ஆயினும், இயற்கையாகவும் செய்கையாகவும் நம்மெல்லோருக்குமுண்டாயிருக்கிற மந்த சுபாவத்தைப் பார்க்கும்போது, குறித்த நேரந் தவறாதிருக்கிற ஒருவனைக் காணுதல் விசேஷமென்றே சொல்லவேண்டும். அப்படிப்பட்ட மனுஷனை யாவருமதித்துப் புகழ்தல் ஆச்சரியமல்ல. உலகத்திற்குப் பெரும்பயனுண்டாகும்படி அரியகாரியங்களை நடப்பித்திருக்கிற பெரியோரெல்லாம் இந்தப் பழக்கத்தை வெகு ஜாக்கிரதையோடு அநுசரித்துவந்திருக்கிறார்கள். பிளாகஸ்டன் என்னும் மகா வித்துவான் தான்செய்யும் அரும்பொருளமைந்த பிரசங்கங்களைக் கேட்கும்படி கூடிவரும் சதசை ஒருநாளென்கிலும் அரைநிமிஷமாவது காக்கவையாமல் குறித்தநேரத்தில் ஆரம்பித்தாரென்று புகழ்ச்சியாகச் சொல்லப்

பட்டிருக்கிறது. பிற்காலத்தில் சிறந்துவிளங்கின புரூவர் என்னும் பெரியவர், மாணாக்கராயிருந்த காலத்தில் ஒருநாள் காலமே ஏழுமணி அடித்தவுடனே, வழக்கப்பிரகாரம் மாணாக்கரெல்லாரும் ஜெபத்துக்கு எழுந்துநின்றார்கள். உபாத்தியாயரும் எழுந்தார்; புரூவரைமாத்திரம் காணோம். அப்பொழுது உபாத்தியாயர் எங்கும் திரும்பிப்பார்த்து, அவர் வரவில்லையென்று கண்டு, சற்றுநேரம் தாமதித்து நின்றார்; உடனே அவரும் வந்துவிட்டார். அப்பொழுது அந்த உபாத்தியாயர் அவரைப்பார்த்து: ஏழுமணி அடித்தாயிற்றென்று ஜெபத்துக்கு ஆரம்பித்தோம்; ஆனாலும் நீ வரவில்லையென்று தெரிந்ததினால், இன்று காலையில் மணி சற்று விரைவாய் ஓடியிருக்குமென்று உத்தேசித்து, நீ வரும்வரையும் காத்திருந்தோம் என்றார். அப்படியே மணியைச் சோதித்துப் பார்க்கும்போது, அது சில நிமிஷம் முந்தி ஓடினதாய்க் காணப்பட்டது. மணிதவறினும் தான் தவறாதிருக்கப் பழகும் பழக்கமன்றோ, மாணாக்கனுக்கு மாட்சிமை அளிக்கத்தக்கது.

மாணாக்கர்மாத்திரமல்ல, மற்ற யாவரும் கல்விவிஷயங்களில் மாத்திரமல்ல, சகல காரியங்களிலும் குறித்தகாலம் தப்பாதிருக்கப் பழகுவது உத்தமம். இன்றைக்குக் கொஞ்சம் தவறிப்போச்சுது; இந்தத்தடவை சற்றுப் பிந்திப்போனேன். இந்த ஒருவதளி தான் இப்படி; இனிமேல் அப்படியிராது என்பது அனைச்சோம்பேறிகளுடைய வார்த்தை. இது முயற்சியுடையோருக்கு அடுக்காது. இன்ன நேரத்தில் எழுந்திருக்கவேண்டுமென்று தீர்மானித்தால், அந்த நேரத்தில் எழுந்திருக்கத் தவறாதே. போஜனஞ் செய்வதற்குமுன்பு இன்னின்ன காரியம் செய்யவேண்டுமென்று நிச்சயித்தால், அந்த நேரம் வருமுன் அந்தக் காரியத்தை எவ்விதமுஞ் செய்தே தீர்க்கவேண்டும். இன்னநேரத்தில் இன்னவிடத்திற்குப் போகவேண்டும்; இன்னவேளையில் இன்ன இடத்திலிருக்கவேண்டும் என்று விரும்பினால், அந்த நேரத்தில் அங்கேயிரு. சிறிதாயினும், பெரிதாயினும், தன்னதாயினும், பிறரதாயினும், எந்தக்காரியத்திலும் குறித்தநேரம் தப்பாதே. மத்தியில் பல அவசரமான காரியங்கள் வந்துவிட்டால் என்னசெய்கிறது? நினைத்தபடி முடியுமா என்று சொல்லுவாய்; அது சரியல்ல. மெய்தான், நமது அறிவுக்கு எட்டாமல் தெய்வாதீனமாய் நடக்கிற சம்பவங்கள் சில உண்டு. அவை ஒவ்வொரு நாளிலும்,

ஒவ்வொரு நேரத்திலும் ஓயாமல் நடக்கிறவைகளல்ல; ஏகதேசம் நடக்கும். மற்றப்படி நீ செய்யவேண்டிய காரியங்களெல்லாம் உனதறிவுக்கு எட்டக்கூடியவைகளும், உனது இஷ்டத்துக்கு அமைந்தவைகளுமாம். ஆதலால் அந்தப் பேச்சும் உதவாது. அப்படி நிர்ணயிக்கப்பட்டவைகளில் ஏதேனும் உண்டு. ஏகதேசம் தவறினாலும், அது உன் குற்றமாகமாட்டாது; ஆதலால் நீ செய்யும் எந்தக் காரியத்திலும் காலம் தவறாதிருக்கப்பார். செய்யக் கடமைப்பட்டிருக்கிற காரியங்கள் இவை, செய்ய விரும்புகிற காரியங்கள் இவை என்று பகுத்து, முதல்முதல் கடமையையும், இரண்டாவது விருப்பத்தையும் நிறைவேற்ற முயலுவாயானால் ஒருக்காலும் தவறமாட்டாய். காலந்தவறாது கைக்கொள்வது கஷ்டமுமல்ல. கடமை விருப்பம் இவ்விரண்டிற்குமுள்ள பேதத்தைப் பகுத்தறிந்து நடவாததினாலேதான் அநேகருக்கு இந்த விதியைக் கைக்கொண்டு நடக்கிறது அரிதாயிருக்கிறது. எப்பொழுதும் கடமையை முந்திச்செய்யப் பழகு, அப்பொழுது சீக்கிரத்தில் காலம் தவறாது நடக்கிற பழக்கம் வந்துவிடும்.

நித்திரையையும் சொப்பனத்தையும் பற்றியது.

இங்கிலாந்தில் ஓர் சாஸ்திர விசாரணைச்சங்கத்தில் ஒருவர் நித்திரையைப்பற்றியும் கனவைப்பற்றியும் பிரசங்கித்தபொழுது, நித்திரையென்பது சுகத்தைத் தருவதும், விலக்கக்கூடாததும், இன்றியமையாததுமாயிருக்கிறதென்று சிறப்பித்திருக்கிறார். சீன தேசத்தில் கொலைசெய்த ஒரு குற்றவாளிக்கு நித்திரை ஒழித்திருப்பதே ஒரு சிக்ஷையாக விதிக்க, அவன் அப்படி நித்திரை விலக்கிய ஒன்பதாவதுநாளில் இறந்துபோனான். மனிதர்கள் தூங்கவேண்டிய காலாவதி ஒருவகைப்பட்டதல்ல; அவனவன் தேகக்கூறளவாய் வேறுபட்டிருக்கும். சராசரி எட்டுமணிகாலமென்று வரையறுத்திருக்கின்றது. ஜான் ஹண்டர் எனகிற பண்டிதர் போஜனம்பண்ணின ஒருமணிகாலம் அல்பநித்திரையும், பின்பு நான்குமணிகாலம் அயர்ந்தநித்திரையும் செய்வது வழக்கம். ஜெனரல் எல்வியட் என்னும் சேனைத்தலைவன் நான்கு மணிகாலமே நித்திரைசெய்துவந்தாராம். இந்துதேசத்தில் "சேமம்

"புகினும் ஜாமத்துறங்கு" என்று ஔவையார் நீதிவாக்கியமிருக்கின்றது. அதிக தூக்கத்தினால் வியாதிக்கிடமாகுமென்று தெரிந்து "அனந்தலாடேல்" என்றும் விதித்திருக்கின்றது. மேலே பிரசங்கித்ததாகச் சொன்ன பண்டிதர் அபிப்பிராயப்படி நிசப்தமும், மிதமான வெப்பமும், போதுமான உடையும், முக்கியமாய் குற்றமற்ற மன அமைதியும் நித்திரைக்கு அநுகூலமானவைகளாகும், மேலும் அவர் மனோவியாபாரம் ஒழிந்திருப்பதை நித்திரையென்றும், சிறிது அந்த வியாபாரம் உண்டாயிருப்பது கனவு என்றும் வரையறுத்திருக்கிறார். ஜன்னிபாதம் முதலான சில வியாதிகளாலுண்டாகும் மயக்கம் தூக்கமன்று, தூங்குங்காலத்தில் கபாலத்திலிருக்கும் மூளையானது ஜாக்கிரத்தில் மனோவியாபாரத்தால் இழந்த பலத்தை மறுபடி தூக்கத்தில் இரத்தத்தின் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறது. தூங்குங்காலத்தில் அல்லது மெய்மறந்தவேளையில் மூளை எந்த நிலைமையில் இருக்கிறதென்று அறியும்படி அந்நிய பண்டிதர் தன்னிடத்திலிருந்த நாயை மருந்தினால் மயங்கி இருக்கச்செய்து, அதின் கபாலத்தில் ஒரு துண்டு அறுத்தெடுத்து, அதற்குப் பிரதி ஒரு கண்ணாடிப்பில்லையை வைத்துப் பொருத்திவிட்டுப் பார்க்கையில், இரத்தத்துவாரங்கள் வெறுமையாயிருந்ததாயும் நாடிகளில் ஓடும் நல்லரத்தத்திற்கு இயல்பான சிவப்புநிறம் போய் நாளங்களில் ஓடும் கெட்ட இரத்தத்திற்குரிய நீலவருணமுண்டாயிருந்ததாயும், மூளையிலுள்ள நாடிகளின் சிக்கம் சுருங்கி மூளையில் நீர்கோத்துக்கொண்டிருந்ததாயும், அந்த நாய் மயக்கந் தெளிந்து எழுந்தபோது மூளையிலுள்ள நாடிகள் தமக்கியல்பான பரிமாணத்தையும் தன்மையையும் மறுபடியுமடைய, முன்வெளுத்திருந்த மூளையானது தனக்குரிய சிவப்புநிறத்தை அடைந்ததாயும், முன் இரத்தநாடிகள் தோன்றாதிருந்த இடங்களிலெல்லாம் அவைகள் தெளிய வெளிப்பட்டதாயும் கண்டாராம்.

அர்த்தசாஸ்திரம்.

தொழிற்பலன் மிகுவதினால் உண்டாகும் நன்மைகள்

மனிதர் செய்யும் பலவகையான தொழில்களின் உத்தேசியமெல்லாங்கூடி, வாழ்க்கைக்குரிய சாதனங்களைச் சம்பாதிக்கவேண்

டுமென்பதேயாம். சமுசாரி உழுகிறதும், தறிகாரன் நெய்கிறதும், கம்மாளன் தொழில்செய்கிறதும், கூலியாள வேலைசெய்கிறதும் எல்லாம் அன்னவஸ்திரமுதலிய பொருட்களைச சம்பாதிப்பதற்கன்றிப் பிறிதொன்றிற்குமல்லவெனபது யாவர்க்கும் தெரிந்த காரியமே. ஒருவன் செய்யும தொழிலின பலன் எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவு வாழ்க்கைககுரிய சாதனங்களும் அதிகமாகின்றனவென்று காண்கிறோம். ஒருவன் ஒரு கெட்ட நிலத்தில் ஒரு வருஷம் பாடுபடுகிறான; ஒரு கலன் நெல்விளைகிறது. அதே மனுஷன் ஒரு நல்ல நிலத்தில் வேறொருவருஷம் பாடுபடுகிறான்; ஐம்பது கலன் நெல்விளைகிறது. இதனால் ஏற்படுகிறதென்னவெனில், அந்த மனுஷனுடைய பிரயாசையினளவும், கால அளவும ஒன்றுபோலிருந்தும், நிலநலத்தினால் அவனது தொழிற்பலன் முந்தினதிலும் ஐம்பதுமடங்கு அதிகமாயிற்றென்றும், தொழிற்பலன அதிகமாகிற அளவுக்குததக்கபடி வாழ்க்கைக்குரிய சாதனமாகிய நெல்லும் ஐம்பதுபங்கு அதிகரித்ததென்றும் தெரியவருகிறது.

ஆரம்பத்தில் நாள் எட்டுசசென்றாலும் ஒரு மேசைக்கு அதிகஞ்செய்யத் திராணியில்லாதிருநத ஒரு தச்சன், வரவரப் பழகித் தேறுவதினால ஒரு நாளில் ஒருமேசை செய்யச் சக்தியுடையனாகிறான். அப்பொழுது அவனுடைய தொழிலுக்கு முன்னிலும் எண்மடங்கு பலன் கிடைககிறது. இன்னும் அநதத் தச்சன் தொழில் பகுத்துசசெய்யும் உபாயத்தினாலாவது, நீராவியந்திரத்தினாலாவது, அல்லது வேறெந்த வகையினாலாவது ஒரு நாளில் இரண்டுமேசை செய்யச் சமர்த்தனானால், அவனுடைய தொழிற்பலன் முன்னிலும் பதினாறுமடங்கு அதிகரிக்கின்றது. இதனால் அந்தத் தசசனுடைய பிரயாசையெல்லாம் ஓரளவாயிருந்தும், அவனது தொழிற்பலன்மாத்திரம் அதிகரிக்கிறது. தொழிற்பலன் அதிகரிக்கவே, சம்பளம் அதிகரிககிறது. சம்பளம் அதிகரிக்கவே, அவன் அதற்குத்தக்கபடி வாழ்க்கைக்குரிய சாதனங்களை வாங்குவதற்கு முன்னிலும் எண்மடங்கு அல்லது பதினாறுமடங்கு சக்தியுடையவனாகிறான்.

கருவி யாதொன்றுமின்றிக் கையினாலேமாத்திரம் ஒருவன் நூல் நூற்றுப் புடவை நெய்வானாகில, அவனது தொழிற்பலனும், அதனாலுண்டாகும் வாழ்க்கைக்குரிய சாதனங்களும் மிகவும் அற்பமா

யிருக்குமென்பதற்கு ஐயமில்லை. ஆனால் அவன் இராட்டின முதலிய கருவிகளை உண்டுபண்ணித் தொழிற்செய்வானாகில், அப்பொழுது அவனது தொழிற்பலன் முன்னிலும் முப்பது நாற்பது மடங்கு அதிகரிக்கவும், அதற்குத் தக்கபடி இல்வாழ்க்கைக்கு ஆவசியகமான அன்னவஸ்திரமுதலிய சாதனங்கள் பெருகவும் வகையுண்டாகிறது. இன்னும் அந்த மனுஷன் இவற்றிலுஞ் சிறந்த யந்திரங்களை யூகித்து, இப்பொழுது ஐரோப்பாகண்டத்தில் நடக்கிறதுபோல, நூற்குந்தொழில், நெய்யுந்தொழில் சகலமும் அவற்றின் உதவியினாலேயே செய்வானாகில், அவனது தொழிற்பலன் மிகவும் அதிகரிக்கும். அதனால் அவன் திரவியசம்பன்னனாகி, வாழ்க்கைக்குரிய சாதனங்களில் ஒன்றிலொன்று குறைவின்றி வாழ்ந்திருப்பான். இதற்கு வேறு திருஷ்டாந்தங்கூறவேண்டியதில்லை. சிறந்த இயந்திரங்களை யூகித்து, அவற்றின் உதவியால் அநேகம் தொழில்களை நடத்துகிற ஐரோப்பியருடைய நிலைமைக்கும், இயந்திரப்பிரயோகம் அவ்வளவு அதிகமில்லாத நம்முடைய நிலைமைக்குமுள்ள பேதமே போதுமான நிதரிசனமாம். இஃது இப்படியானால், இயந்திரப்பிரயோகமாவது வினைவருக்குஞ்செய்யுமுபாயமாவது சற்றேனும் தெரியாத மூட ஜனங்களுடைய சீரைக் கேட்பானேன்? நித்திய தரித்திரமே அவர்கள் பங்கு.* அவர்களுடைய ஆஸ்தியெல்லாம் திரட்டினால் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வில்லும் அம்புந்தவிர, வேறொன்றுமிராது. கடவுள் அமைத்த முறையறிந்தொழுகாதார் இன்புற்றுவாழ்தல் அரிது. சாதனமின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை. கருவிகளை யூகித்துத் தொழிற்செய்வதே, யுத்தியெனுங் காரணமுடைய மாந்தரது கடமையென்று, கடவுள் அமைத்தார். ஆதலால் மனிதர் யுத்தியினால் கருவிகளை உபயோகப்படுத்துவதற்குத்தக்கபடி வாழ்வாவது தாழ்வாவது அடைகிறார்கள்.

தொழிற்பலன் மிகுவதினால் உண்டாகும் நன்மைகள் அந்தத் தொழில் செய்வோருக்கும் அவர்கள் வகையாட்களுக்குமாத்திரமல்ல, தேசமுழுவதிற்குஞ் செல்லுகின்றன. நெல், தானியம், பருத்தி முதலிய விளைபொருட்களும், கட்டில், மெத்தை, மேசை, நாற்காலி முதலிய செய்பொருட்களும் போன வருஷத்திலும் இந்த வருஷத்தில் மும்மடங்கு அதிகரிக்குமானால், இந்த நன்மைகளை அநுபவியாதவர்கள் தேசத்தில் யார்தான் உண்டு. கொஞ்சமா

னும் அதிகமானாலும் எல்லோரும் இவற்றில் பங்குபெறுவார்க ளென்பதற்கு ஆட்சேபமில்லை. இயந்திரப்பிரயோகமும் வினை செயல் வகையுமாகிய இவ்விரு சாதனங்களாலும் இவ்வளவு பெரிய நன்மைகள் விளைகின்றனவென்று காண்கிறோம்.

இவ்வாறு வரும் நன்மைகள் எல்லோர்க்கும் பொதுவானாலும் விசேஷமாய்க் கொத்துவேலை கூலிவேலைசெய்து பிழைக்கிற தாழ்ந்த நிலைமையிலுள்ளோருக்கும், சொற்பவரும்படி வைத்துக் கொண்டு உபாய காலட்சேபஞ்செய்கிற நடுத்தரமானவர்களுக்குமே மிகவும் அவசியகமானவைகளாம். தனவான்களுக்கும் பிரபுக்களுக்கும் அப்படியல்ல. வருஷம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம், அறுபதினாயிரம் ரூபாய் வரததுள்ள ஒருவனுக்கு நெல், கலன் ஒன்றுக்கு ரூபாய் மூன்றாக விற்றாலென்ன? முப்பதாக விற்றாலென்ன? ஒரு வண்டி விறகு ஒரு ரூபாய் ஆனாலதான் என்ன? ஒன்பது ரூபாய் ஆனால்தான் என்ன? அவனுக்கு இது ஒரு விஷயமல்ல. ஒரு கெஜம் துணி ஒருஅணா விலையானாலும் ஒருரூபாய் விலையானாலும் அவனுக்குப் பெரியகாரியமல்ல. எந்தப் பொருள் என்ன விலைக்கு விற்றாலும் அவன் தனக்கு யாதொரு வருத்தமும் சங்கடமுமின்றி வாங்கி அநுபவிக்கத் தகுதியுள்ளவனாயிருக்கிறான். ஆனால் மாசத்துக்கு இருபது முப்பது ரூபாய் வரும்படியுள்ள வேலைக்காரரும், நாளொன்றுக்கு கால் அரை சம்பளமுள்ள கூலிக்காரரும் மலிவாய் விற்றால்தான் பொருட்களை வாங்கி அநுபவிக்கக்கூடும்; அல்லவென்றால், அன்னவஸ்திரமுதலிய வற்றிற்குக்கூட முட்டுப்பட்டுத் துன்புறுவார்கள். ஆதலால் இயந்திரோபாயத்தினால் தொழிற்பலன் அதிகரித்து, சாமான்கள் மலிந்து பெருகும்போது, அவற்றால் அதிகப்பலன் அநுபவிக்கிறவர்கள் வேலைசெய்து ஜீவனஞ்செய்யவேண்டிய ஸ்திதியிலுள்ளவர்களேயென்பது தெளிவாகிறது.

ஆனாலும் இந்தச் சாத்தியத்தை மறுத்து ஆட்சேபஞ்சொல்லுகிறவர்களுமுண்டு. எப்படியெனில்; ஒரு மனுஷனுக்குப் பத்து மேசை தேவையாயிருந்தால், மேசைக்குப் பத்துத தச்சுவீதம், பத்துமேசைக்கும் நூறு தச்சுபபிடிக்கிறது; அதனால் நூறுபேருக்கு ஜீவனங்கழிகிறது. இதைவிட்டு இயந்திரோபாயத்தினால் ஒருவனே அந்தப் பத்துமேசையையுஞ் செய்துபோடுகிறது என்று வருமானால், மற்றத் தொண்ணூற்றொன்பதுபேருக்கும் போக்கெங்

கே? அவர்களெல்லாரும் வேலைகிடையாமற் சாகவேண்டுமே. ஆதலால் தொழிற்பலனை அதிகரிக்கும் உபாயங்களையும் வழிவகைகளையும் சூழ்ந்து இயந்திரங்களை யுபயோகப்பதனால் வேலையைக் குறைத்து, ஜனங்களுக்கு விசேஷமாய்க் கூலியாட்களுக்குக் கேடு விளைவிக்கிறதேயன்றி, அநுகூலஞ்செய்யவில்லை என்கிறார்கள். இந்த ஆட்சேபம் நியாயவழுவாயிருக்கிறதுமன்றி, ஜனங்களுக்குள் தப்பான அபிப்பிராயத்தை உண்டுபண்ணி மிகுந்த கேடு விளைவிக்கத்தக்கதாயுமிருப்பதனால், இதைப்பற்றிச் சற்றுப் பிரஸ்தாபிப்போம்.

அவர்கள் கூறும் ஆட்சேபம் ஆதாரமற்றதென்பதற்கு யுக்திப் பிரமாணமொன்றும் வேண்டாம். தற்காலத்தில் பிரத்தியட்சமாய் விளங்குகிற திருஷ்டாந்தங்களில் சிலவற்றைக் கவனித்தால் போதும். முதலாவது: நமது தேசத்திலுள்ள புஸ்தகங்களெல்லாம் கையெழுத்துப் பிரதியிலேயே இருந்தமையால், ஒரு புஸ்தகம் எழுதிமுடிய ஒரு ஆளுக்கு ஒரு வருஷம் இரண்டு வருஷம் மூன்று வருஷமவரையுஞ் செல்லும். அப்புறம் ஐரோப்பாகண்டத்திலிருந்து ஒருநாளில் ஆயிரம் பதினாயிரம் புஸ்தகங்கள் அடிக்கத்தக்க அச்சியந்திரம் வந்து சேர்ந்தது; அதன் முடிவென்ன? ஜனங்களுக்குப் பிழைப்புக் குன்றிவிட்டதா? முன் ஏடெழுதி ஜீவனஞ்செய்துவந்தவர்களின் தொகையிலும் இப்பொழுது அச்சியந்திரசாலைகளில் அலுவல்பார்க்கிறவர்களின் தொகை குறைந்துவிட்டதா? இல்லை. முன்னிலும் ஆயிரமடங்கு அதிகமான ஜனங்கள் பிழைக்கிறதற்கு வகையுண்டானதுமன்றி, அவர்களைப் பார்க்கிலும் இவர்கள் அதிக வருமானமும் மேன்மையுமுடையவர்களாய் உயர்ந்திருக்கிறார்களென்பது பிரத்தியட்சம். இரண்டாவது: நீராவியந்திரத்தின் பலனைப்பார்ப்போம்; இத்தேசத்தில் இருப்புப்பாதை போடத்தொடங்கிய ஆரம்பத்தில், இனி வண்டிக்காரர், சுமைகாரர் ஒருவருக்கும் பிழைப்பில்லை; எல்லாருஞ் சுருங்கிப்போம் என்றார்கள். இப்பொழுது காரியம் எப்படியிருக்கிறது? வியாபாரமும் ஜனங்கள் அந்நிய ஊர்களுக்குப் பிரயாணஞ்செய்தலும், இப்பொழுது எத்தனையோ மடங்கு அதிகப்பட்டிருக்கின்றன. புகைவண்டியை ஒட்டி ஜீவனஞ்செய்கிற ஜனங்களுக்குக் கணக்குவழக்கில்லை. இவ்வளவு ஜனங்களும் முன்னிலும் எவ்வளவோ சிறப்பும் செல்வமும் பெற்று வாழுகிறார்கள். இங்கிலாந்துதேசத்தில் இருபது வருஷத்துக்குமுன்னிருந்த வே

லைக்காரரிலும், எத்தனையோ பங்கு அதிக ஆட்கள் தற்காலத்தில் தேவையாயிருக்கிறதாம. சமபளமும் இருமடங்கு மும்மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. உழைத்து ஜீவனஞ்செய்கிற ஜனங்களுடைய நிலைமை முன்னிலும் மிகவும் அதிகமாய் உயர்ந்திருக்கிறது. இதற்கெல்லாம காரணமென்னவென்று விசாரித்தால், சென்ற இருபதுவருஷகாலமாய் அதிகரித்துக்கொண்டேவருகிற இயந்திரப்பிரயோகமேயன்றி வேறொன்றில்லையென விளங்கும். மேலும் அங்கே வழங்குகிற பலவகையான இயந்திரங்களுள் மனிதருடைய பிரயாசத்தை மிகவும் அதிகமாய் குறைக்கத்தக்க இயந்திரங்கள் எவையென்று கேட்டால், பஞ்சினுலும் இரும்பினுலுஞ் செய்ய வேண்டிய தொழில்களைச் செய்கிற இயந்திரங்களேயென்று யாவருஞ் சொல்லுவார்கள். நல்லது அவ்விருவகை இயந்திரங்களிலும வேலைசெய்து பிழைக்கிறவர்களுடைய தொகை மற்ற இயந்திரங்களில் வேலைசெய்கிறவர்களுடைய தொகைக்குக் குறைந்துவிட்டதா என்று கேட்டால், இல்லை; மிகவும அதிகப்பட்டிருக்கிறதென்று எவரும் சொல்லுவார்கள். பஞ்சும், நாருமாகிய இரண்டும் இயந்திரப்பிரயோகத்தினுலேயே தொழிற்பட்டபோதிலும், நாரிலும் பஞ்சுக்கு இயந்திரப்பிரயோகம் அதிகம். அதனுல் காரியம எப்படியிருக்கிறதென்றால், நார் தொழிற்படும் இயந்திரத்தில வேலைபார்க்கிறவர்கள் மெத்தக் கொஞ்சமும் அற்ப சம்பளம் வாங்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். பஞ்சியந்திரத்தில் அலுவலபார்க்கிறவர்களோ மெத்த அதிகமும் நல்ல சம்பளம் பெறுகிறவர்களுமாயிருக்கிறார்கள். இதனுல் ஏற்படுகிறதென்னவெனில, இயந்திரப்பிரயோகத்தினுல் ஜனங்கள் வேலையற்றுப்போய்த் தரித்திரம அடையாமல், அவர்களுக்குப் போதுமான வேலையும் பலனுங்கிடைக்கிறதென்றும், இயந்திரப்பிரயோகம் எவ்வளவு அதிகப்படுகிறதோ அவ்வளவு ஜனங்களுடைய செல்வமும் சௌக்கியமும அதிகப்படுகின்றனவென்றும், இயந்திரத்தின் பிரயோஜனம் இன்னதென்று ஒருவனுக்கு அறிவுறுத்த பிரத்தியட்சமான இந்தத் திருஷ்டாந்தங்களே போதும் என்று அறிக.

இயந்திரத்தின் இயல்பே மனுஷருடைய பிரயாசையைக் குறைக்கிறதாயிருக்க, அதன் பிரயோகத்தினுல் வேலையாட்களின் தொகை பெருகவும் சம்பளம அதிகரிக்கவும் காரணமென்னவென்று கேட்டால், அது அடியில் வரும் நியாயங்களால் புலப்

படும். எப்படியெனில்: ஒரு நாட்டில் பதினாயிரமுழம் பஞ்சுநூற் புடவை செலவாகிறதென்றும், அதை நெய்கிறதில் நூறுபேருக்குப் போதுமான வேலையும் பிழைப்புமிருக்கின்றனவென்றும் வைத்துக்கொள்வோம். இந்தப் பதினாயிரமுழத்தையும் இயந்திரோபாயத்தினாலோ, வேறென்ன காரணத்தினாலோ ஐம்பது பேரைக்கொண்டு நெய்துபோடலாமென்று வருமானால், மற்ற ஐம்பதுபேருக்கும் அதில் வேலையிராதென்பது வாஸ்தவமே, ஆயினும் நெசவுத்தொழிலிலுண்டான இந்தச் சகாயத்தினால் முன் ரூபாய்க்கு இரண்டுமுழம் விற்ற புடவை, இப்பொழுது நாலுமுழமாக விற்கிறதென்றும், முன் பதினாயிரம்முழஞ் செலவான நாட்டில், இப்பொழுது இருபதினாயிரமுழம் செலவாகிறதென்றும் வைத்துக்கொள்வோம். அப்பொழுது முன்போலவே நூறுபேருக்குப் போதுமான வேலையும் பிழைப்பும் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ரூபாய்க்கு இரண்டுமுழம் விற்றகாலத்தில், வருஷமொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள தனவான்கள்மாத்திரம் அந்தப் புடவை வாங்கினார்கள். ரூபாய்க்கு நாலுமுழமாக விற்கிற இக்காலத்தில் வருஷமொன்றுக்கு ஐந்நூறு ரூபாய் வரும்படியுள்ளவர்களும் அந்தப் புடவையை வாங்கி உபயோகப்படுத்துகிறார்களென்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் எந்நாட்டிற் பார்த்தாலும் ஆயிரம் ரூபாய் வரும்படியுள்ளவர்களின் தொகையிலும் ஐந்நூறு ரூபாய் வரும்படியுள்ளவர்களின் தொகை இருமடங்கு மும்மடங்கு அதிகமாயிருக்குமென்பதற்கு ஆட்சேபமில்லை. ஆகவே, முன்போல அல்லது முன்னிலும் அதிகமான புடவை செலவாகவும், அதிக ஆட்களுக்குப் பிழைப்பு நடக்கவும் இந்த ஐந்நூறு ரூபாய் வரும்படியுள்ளவர்களின் தொகைமாத்திரமே போதுமென்று விளங்குகிறது. இதோடுகூட அறுநூறு, எழுநூறு, எண்ணூறு ரூபாய் வரும்படியுள்ளவர்களின் தொகையையுங்கூட்டினால் முன்னிலும் மிகவும் அதிகமான புடவை செலவாகவும், மிகவும் அதிகமானபேருக்குத் தொழில் நடக்கவும் வழியுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை. மேலும் அந்தப் புடவையின் விலை மெத்த சகாயத்துக்கு வந்துவிட்டபடியால், மேற்சொல்லிய பலதரத்தாரும் முன்போலல்ல அதிகத் தாராளமாயுஞ் சம்பிரமமாயும் உடுத்திக்கொள்ளவும், முன் விலை அதிகமென்று உபயோகப்படுத்தாமல் விட்டிருந்த அநேக காரியங்களுக்கு இப்பொழுது விலை

சகாயமென்று வாங்கி உபயோகப்படுத்தவும் ஏதுவுண்டாகிறது. இதையெல்லாம் சிந்திக்கும்போது மனிதருடைய பிரயாசை யைக் குறைக்கத்தக்க இயந்திரப்பிரயோகம் எவ்வளவு அதிகரிக் கிறதோ, அவ்வளவு வேலையாட்களின் தொகையும் அதிகரிக்கு மென்றும், தொழிற்பலன் மிகுகிற அளவுக்குத்தக்கபடி அத்தொ ழில் செய்வோரின் சம்பளமும் உயருமென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

ஆயினும் இதன் பலன் வேலைக்காரர், தொழிலாளிகள் என்றி வர்களோடேமட்டும் நின்றுபோகாமல், தேசத்திலுள்ள ஒவ்வொ ருவருக்கும் தனித்தனி செல்லுகிறது. புடவைகள், புஸ்தகங்கள், பலவகையான இரும்புச்சாமான்கள் முதலிய ஆவசியகமான பொ ருட்களெல்லாம் இப்பொழுது இயந்திரோபாயத்தினால் முன்னி லும் எத்தனையோ பங்கு அதிகமான கிரயத்துக்கு வந்துவிட்டப் படியால், இவற்றை வாங்கி உபயோகப்படுத்தாதவர்கள் தேசத்தில் யார்தான் உண்டு? * இயந்திரப்பிரயோகத்தினால் பொருட்கள் இவ்வளவு மலிவானதுமாத்திரமல்ல, எவரும் இச்சிக்கத்தக்க அழகாயும் நேர்த்தியாயும் செய்யப்படுகின்றனவென்பது ஒருவரு மறுக்கக்கூடாதவிஷயமே. இவ்வகையான பொதுப்பிரயோஜனங் களுக்கு வேலைக்காரர், கூலிக்காரர் என்றிருதிறத்தாரும் பங்கா ளராவதால், இயந்திரப் பிரயோகத்தினால் அவர்களுக்குப் பலன் கிடைக்கிறது. பிறருக்கொப்பந்தம் தாங்களும் பொருட்களை தணி ந்த கிரயத்துக்கு வாங்கி அநுபவிக்கிறதுமன்றி, தங்களுக்குச் சம்பளமும் அதிகம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்; பணக்காரர்களு க்கு இவ்வளவு பலனில்லை. அவர்கள் பணத்துக்கு முன் எவ்வ ளவு வட்டிகிடைத்ததோ, அவ்வளவுதான் இப்பொழுதுங் கிடைக் கிறது. அதாவது: வேலைக்காரர் கூலிக்காரைப்போல அவர்களு டைய வருமானம் அதிகப்படாமல் பொருட்களைச் சகாயமாக விலைக்கு வாங்குகிற பிரயோஜனமொன்றுமாத்திரம் அவர்களுக் குக் கிடைக்கிறது. ஆயினும் இவ்வாறு பலன் அநுபவிப்பதில் ஒருவருக்கொருவர் சற்று ஏற்றத்தாழ்ச்சியிருந்தபோதிலும், தேசத் திலுள்ள செல்வர், வறியர், சமுசாரி, தொழிலாளி, வேலைக்காரர், கூலியாள் என்றெத்திறத்தவரும் இயந்திரப் பிரயோகத்தினால் பெ ரும்பயன் அடைகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆதலால் தேசவாழ்வுக்கு அநுகூலமான எவ்வித இயந்திரக் கலையாவது யூகித்து வெளியிடுகிற யுக்திசாலிகள் ஜனங்களுக்கு அளவிறந்த நன்மை விளைவிக்கிற உபகாரிகளென்றும், அவர்களுடைய பிரயத்தனம் முயற்சி ஒவ்வொன்றையும் நாம் நன்குமதித்து, அவர்கள் கண்டுபிடிக்கிற நூதனங்களில களிகூர்ந்து நம் மாலியன்றமட்டும் அவர்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்றும், அவர்கள் உத்தேசியங்களிற் சில பலிக்கவில்லையென்பதினால் அவர்களை அவமதித்துத் தூஷிக்கிறது மெத்தப் புத்தியீனமான செய்கையென்றும் விளங்குகிறது. ஒருவன் வாழ்வடைகிறது மற்றவர்களுக்கும் நன்மையேயன்றிக் கேடல்ல என்றும், பிறருக்குதவிசெய்கிற எவனும் தனக்குப் பெருநன்மை செய்கிறவனேயன்றி ஒருபோதும் நஷ்டமடைகிறவனல்லவென்றும் இரண்டு பிரமாணங்கள் மேற்கூறியவற்றிலிருந்து ஏற்படுகின்றன.

வீடுகளில் பற்றிய நெருப்பைச் சீக்கிரத்தில் அணைக்கும் வகை.

எவ்விதமாயாவது வீடுகளில் நெருப்பு பற்றிக்கொண்டால் அதைக் கேட்டமாத்திரததில் அல்லது பார்த்தமாத்திரத்தில் உண்டாகும் மனப்பதற்றத்தைக் கூடியமட்டும் நீக்கிவிட்டு, கீழே காட்டிய உபாயத்தைப் பிரயோகித்தால் மிகுந்த நன்மையுண்டாகும்.

நெருப்பு பற்றிக்கொண்டதென்ற செய்தி கேட்டவுடனே, இரண்டுமூன்று கம்பளிப்போர்வைகளைக் கொண்டுவந்து, அவற்றைத் தண்ணீரில் நன்றாய் நனைத்து, நெருப்பு பற்றியிருக்கும் அறையின் தரையின்மேல் நன்றாய் விரித்துவிட்டு, தண்ணீரில் நனைத்த வேறொரு கம்பளிப்போர்வையைக் கையில் எடுத்துக்கொண்டு, அவ்வறையில் எங்கெங்கே நெருப்பின் சுவாலைகளுண்டாயிருக்கின்றனவோ, அவ்விடங்களிலெல்லாம் சுவாலைகளை அப்போர்வையினால் அடித்து அணைக்கும்படி பிரயாசப்படவேண்டும். நெருப்புபற்றின துவக்கத்தில் மேலே காட்டியபிரகாரம் இரண்டுமூன்று பானைத் தண்ணீரினாலும், சில கம்பளிப்போர்வைகளினாலும் நெ

ருப்பை லகுவாய் அணைத்துப்போடலாம். ஆரம்பத்திலேயே இப்படிச் செய்யாமல் தாமதித்தால், பின்பு நூறுகுடம் தண்ணீரைப் பிரயோகித்தாலும் நெருப்பை அணைப்பது வருத்தமான காரியமாயிருக்கும். கம்பளிப்போர்வைகள் கிடையாதபக்ஷத்தில் சாதாரண பருத்திநூல் புடைவைகளை உபயோகிக்கலாம்; ஆனால் இவைகள் கம்பளிப்போர்வைகளுக்கு நிகராகமாட்டா.

ஸ்திரீகள் பிள்ளைகளுடைய வஸ்திரங்களில் நெருப்பு பற்றும்பொழுது செய்ய வேண்டிய உபாயம்.

ஸ்திரீகள் பிள்ளைகள் தரித்திருக்கும் வஸ்திரங்களில் நெருப்பு பற்றிக்கொண்டால், சில சமயங்களில் பெரிய மோசங்கள் சம்பவிக்கும்; ஆகையால் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஸ்திரீகளும் பிள்ளைகளும் கீழே சொல்லியிருக்கும் முக்கியமான குறிப்புகளை அறிந்து, ஞாபகத்தில் பதித்துவைத்துக்கொள்ளும்படி யாவரும் பிரயத்தனஞ்செய்தால் நலமாயிருக்கும்.

முதலாவது: நெருப்பின் சுவாலைகள் இயல்பாய் மேல்நோக்கியே எழும்புகின்றன. ஆட்களுடைய வஸ்திரங்களில் நெருப்பு பற்றிக்கொண்டபின்பு, அவர்கள் நிமிர்ந்துநிற்பார்களேயாகில் அல்லது ஓடுவார்களானால், வஸ்திரத்தின் கீழ்ப்பாகங்களில் பிடித்த நெருப்பின் சுவாலைகள் மேலே வீசி எழும்புகையில், வஸ்திரத்தின் மேல்பாகங்கள் வெகு இலேசாயும் துரிதமாயும் எரிந்துபோம்; ஆகையால் தேகத்தின் மேல்பாகத்திலுள்ள மகா முக்கிய ஸ்தானங்களாகிய நெஞ்சு, கழுத்து, சிரசு முதலியவைகளில் நெருப்பின் அதிகொடூரமான சுவாலைகள் தாக்க, அதினால் பெரிய சேதங்களும் பிராணாபாயமும் சம்பவிக்க ஏதுவுண்டாகும். வஸ்திரத்தில் நெருப்பு பற்றினதினால் அலறிக்கொண்டு நிமிர்ந்துநிற்றல் அல்லது ஓடுதல் நல்லதல்ல.

இரண்டாவது: ஒரு ஸ்திரீயின் வஸ்திரத்தில் நெருப்பு பற்றிக்கொண்ட சமயத்தில், உடனே அவள் தன் வஸ்திரத்தைக் களைந்து தூரத்தில் போட்டுவிட சந்தர்ப்பமில்லாதபக்ஷத்தில் அவள் செய்

யவேண்டியதென்னவெனில்: அவள் வேறொன்றும் செய்ய எதா னியாமல், உடனே தரையின்மேல் நீட்டிக்கிடந்து படுத்து உருண்டு கொண்டே வரவேண்டும். இப்படித் தரையின்மேல் உருளுகிறதி னால் நெருப்பின் ஜுவாலைகள் முற்றிலும் அணைந்துபோவதற்கு ஏதுவில்லாமல் போனபோதிலும், உதவிசெய்யத்தக்கவர்கள் வந்து சேருமட்டும் நெருப்பு வேகமாய்ப் பரவி வஸ்திரத்தையெல் லாம் பற்றுமலிருப்பதற்கும், தேகத்தின் மேல்பாகங்களாகிய நெஞ்சு, கழுத்து, சிரசு முதலிய விசேஷித்த ஸ்தானங்களில் நெ ருப்புபட்டு, பெரிய மோசங்கள் சம்பவியாமலிருப்பதற்கும் ஏது வுண்டாகும். பிளானல்துணி, கம்பளிப்போர்வை, இரத்தினகம் பளி முதலியவற்றைக்கொண்டு சிரசு கழுத்து முதலான முக்கிய பாகங்களை நன்றாய் மூடிக்கொண்டும் தரையின்மேல் படுத்து உரு ளலாம்.

மூன்றாவது: வஸ்திரங்களில் நெருப்பு பற்றிக்கொண்டவுடனே அடர்த்தியான ஒரு கம்பளிப்போர்வையை எடுத்து, நெருப் பின் ஜுவாலைகளின்மேல் போட்டு, காற்று உள்ளே பிரவேசியாத படிக்குக் கம்பளியையும் நெருப்புபற்றிய வஸ்திரத்தையும் சேர்த் து நெருக்கினால் வெகு சீக்கிரத்தில் நெருப்பு அணைந்துபோவதற் கிடமுண்டாகும். காற்று அல்லது ஆகாயமில்லாவிட்டால் நெ ருப்பு எரியமாட்டாது. ஆனகையால் வீடுகளில் தகுந்த ஓர் இடத் தில் யாவருக்கும் தெரியத்தக்கதாக ஒரு கம்பளிப்போர்வையை வைத்திருந்து, அதின் பிரயோஜனத்தையும் அதை உபயோகிக்க வேண்டிய விதத்தையும் ஸ்திரீகள் பிள்ளைகள் முதலியவர்களுக்கு நன்றாய் உணர்த்தியிருந்தால், வஸ்திரங்களில் நெருப்புபற்றும் சம யங்களில் அவர்கள் உடனே அக்கம்பளிப்போர்வையை எடுத்து வந்து, மேற்சொன்னபிரகாரம் உபயோகித்து மிகுந்த நன்மை அடைவதற்கு இடமுண்டாகும். கம்பளிப்போர்வையை எரிகிற வஸ்திரத்தின்மேல் போட்டுச் சுற்றிக்கொண்டும் தரையின்மேல் படுத்து உருளலாம். அதினால் மிகுந்த பிரயோஜனமுண்டாகும்.

———

பூண்டுகளைக் கெடுத்து நாசம்பண்ணும் கம்பளிப் பூச்சி முதலிய பலவகைப் பூச்சிகளை நீக்கும் வகை.

முதலாவது: கடைகளில் அகப்படும் கந்தகத்தை மிகவும் நேர்த்தியான மாவாகப் பொடிசெய்து, அம்மாவை மெல்லிய துணிகளில்போட்டுப் பூச்சிகள் பற்றியிருக்கும் செடிகள் விருக்ஷங்களின் இலைகளின்மேல் தெளித்தால், அநேகஜாதிப் பூச்சிகள் வெகு சீக்கிரத்தில் நீங்கிப்போய்விடும். இப்படிப் பூண்டுகளின்மேல் கந்தகத்தைப் பிரயோகிக்கிறதினால், அவற்றிலுள்ள பூச்சிகள் அழிக்கப்படுகிறதுமின்றி, அப்பூண்டுகளும் கந்தகத்தை உட்கொண்டு, அதினால் நூதன சுகத்தை அடைந்து வெகு செழிப்பாய் வளருகின்றன.

இரண்டாவது: ஒரு சட்டியில நெருப்புக்கரிகளைப் போட்டுக் கம்பளிப்பூச்சிகள் பற்றியிருக்கும் செடிகள் விருக்ஷங்களின் கிளைகளின்கீழ் அந்நெருப்புச்சட்டியை வைத்து, கொஞ்சம் கந்தகத்தை எடுத்து நெருப்பின்மேல் போட்டால், அதிலுண்டாகும் கந்தகப்புகையானது அச்சமயத்தில செடிகளிலிருக்கும் பூச்சிகளையெல்லாம் அழித்துப்போடுகிறதுந்தவிர, அவ்வருஷத்திலெல்லாம் அச்செடிகளில மறுபடியும் பூச்சிகள் உற்பத்தியாகாதிருக்கும்படி செய்கின்றது. ஒரு பவுன் நிறையுள்ள கந்தகமானது அநேக காணி நிலத்தின்மேலுள்ள செடிகளுக்குப் போதுமானதாயிருக்கும்.

மூன்றாவது: செடிகள் விருக்ஷங்களில் (முக்கியமாய்க் கனிவிருக்ஷங்களில்) பற்றியிருக்கும் கம்பளிப்பூச்சி முதலிய பூச்சிகளை நீக்குவதற்கு வேறொரு நல்லவகை என்னவென்றால்: வேப்பம்பட்டையையும், புகையிலையையும் சமநிறையாக எடுத்துத் தண்ணீரில் நன்றாய்க் காய்ச்சி அக்கியாழத்தில் கொஞ்சம் எடுத்து, இலைகள் இளங்கிளைகள் முதலியவற்றின்மேல் உதயமும் சாயந்தரமுமாக சில தினங்களுக்குத் தெளித்தால் வெகு பிரயோஜனமுண்டாகும்.

[Communicated]

பாஷையின் உற்பத்தி விருத்தி வரலாறு.*

(Rise and Progress of Language)

(தொடர்ச்சி)

ஒலிவடிவுப்பாஷைக்குப்பின் வரிவடிவுப்பாஷை விருத்தியடைந்த தென்கிறது. தொனிகளின் மூலமாய் ஒருவர் கருத்தை ஒருவருக்கு வெளிப்படுத்திக்கொண்டிருந்த மனிதர், பிறகு எழுத்தென்ப பெயர்கொண்டிலங்கும் சில அறிகுறிகளின் மூலமாய்த் தங்கள் கருத்தைத் தூரத்திலுள்ளவர்களுக்கும், தங்கள் ஜீவிதகாலத்திற்குப் பின்னிருப்பவர்களுக்கும் அறிவித்துவந்தனர். பொருட்குறிகளென்றும் பதக்குறிகளென்றும் எழுத்துக்கள் இருவகைப்படும். பூர்வீகத்தார் வழங்கிய படங்களும், சித்திரபாஷிதங்களும், அடையாளங்களும் பொருட்குறிகள். இக்காலத்துப் பாஷைகளில் வழங்கிவரும் அக்ஷரங்கள் பதக்குறிகள்.

முதன்முதல் மனிதர் ஓரிடத்தில் நடக்கும் விஷயங்களைப் பிறதேசங்களில் உள்ளவர்களுக்கு அறிவிக்கவும், தூரத்துச் சங்கதிகளைப் பிறகாலத்திலுள்ளவர்கள் அறியவும் படங்களை எழுதிவைத்தனர். அமெரிக்காதேசம் கண்டுபிடிக்கப்பட்டபோது, அவ்விடத்திலுள்ள மெக்ஸிக்கோ நாட்டார் இவ்வாறு படங்களின் மூலமாய் வெகுகாலத்துச் சங்கதிகளையெல்லாம் குறித்துவைத்திருந்தனர். ஆனால் கண்ணுக்குத் தெளிவாய்த் தோன்றும் விஷயங்களைத்தவிர, நுட்பமான சங்கதிகளையும், திருஷ்டிக்குத் தென்படாத வஸ்துக்களையும் படங்களால் ஒரே தொடர்பாய்க் குறித்துக்காட்டுவது அரிது.

படப்பாஷைக்குரிய குறைவுகளை நீக்கும்பொருட்டு, கண்ணுக்குத் தென்படாத வஸ்துக்களுக்கு அறிகுறியாய்ச் சித்திரபாஷிதங்கள் வழங்கப்பட்டன. உதாரணமாய், ஞானத்துக்குக் கண்ணும், நித்தியத்திற்குச் சக்கரமும், கவியினத்திற்கு விரியன்பாம்பும், மதியீனத்திற்கு ஈயும், அறிவுக்கு எறும்பும், ஜெயத்திற்கு ராஜாளியும், தாயின் வயிற்றிலுள்ள பிள்ளைக்குப் பின்னே சூரியனுக்குள் வரையப்பட்ட நட்சத்திரமும், எல்லாராலும் நாணப்பட்ட மனிதனுக்கு விலங்கும், வாய்க்குக் கீழ்நோக்கிய இளம்பிறைச் சந்திரனும் சித்திரபாஷித அறிகுறிகளாயிருந்தன. இந்தப் பாஷை மெக்ஸிக்கோ நாட்டார்களுக்குள்ளும், முக்கியமாய் எகிப்துதேசத்தார்களுக்குள்ளும் வழங்கிவந்தது. சித்திரபாஷித அறிகுறிகள் மயக்கத்திற்கிடமாயும் ஒருவர் கருத்தை ஒருவருக்குத் தெளிவாய் விளக்குதற்கேலாதனவாயும் இருந்தமையால், அக்ஷரங்கள் எகிப்தரால் உபயோகிக்கப்பட்டதன்பின் அவைகள் வெகுவாய் ஒழிந்துபோக, அத்தேசத்துப் பூசாரிகள் மாத்திரம் அவைகளைப் பரிசுத்த எழுத்துக்களாய் எண்ணி மிகுந்த கவனத்தோடு காத்துவந்தார்கள்.

வேறு சில சித்திரபாஷிதங்களைத் தவிர சில அடையாளங்களை இடுகுறியாய் வைத்துக் கருதியபொருளை விளக்கிவந்தனர். திருஷ்டாந்தமாய் தென் அமெரிக்காவிலுள்ள பெருநாட்டார் பலவர்ணங்களையுடைய சில கயிறுகளைத் திரித்து,

அக்கயிறுகளில் பலதரமான முடிச்சுகளைப்போட்டு, பலவாறு அவைகளை அடுக்கி, அவற்றின்மூலமாய்த் தாங்கள் பண்ணிக்கொண்ட ஏற்பாட்டின்படியே ஒருவர் கருத்தை ஒருவருக்கு வெளிப்படுத்தினர். அப்படியே சீனதேசத்தாரும் பதங்களை அக்ஷரங்களால் குறிக்காமல், ஒவ்வொரு கருத்தையும் வெவ்வேறு அடையாளங்களால் குறிக்கின்றனர். மேலும் ஒரு பதத்தையே வெவ்வேறுவிதமாய் உச்சரிப்பதால் வெவ்வேறு காரியங்களைக் குறிக்கின்றனர். ஆகவே, அவர்களது பொருட்குறிகள் 70,000க்கு அதிகப்படுகிறபடியால், அப்பாஷையைப் பூரணமாய்க் கற்பதற்கு ஒருவனுடைய ஆயுள்நாள் எல்லாஞ்செல்லும். அராபிதேசத்திலிருந்து ஐரோப்பாக்கண்டத்தில் எண்களுக்காகவந்து வழங்கும், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 என்னும் அறிகுறிகளும் இவ்வகையான அடையாளங்களேயாம். இக்கால மின்கம்பி வழியாய்ச் செய்தி அறிவிக்கும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் அறிகுறிகளும் இதனுள் அடங்கும்.

மேற்கூறிய மூன்றுவிதமான எழுத்துக்களும் குறைவுள்ளவைகளும், சந்தேகத்திற்கிடமானவைகளும், ஒருவர் கருத்தை ஒருவருக்கு அறிவிக்கும் விஷயத்தில் மிகுந்த தொந்தரவை உண்டுபண்ணுகிறவைகளுமாதலால், மனிதர் வெகு அற்பமாய் ஆராய்ந்து பொருட்குறிகளைத் தள்ளி, பாஷையில் சிதறிக்கிடக்கும் தனிதொனிகளையெல்லாம் பொறுக்கியெடுத்து, முதலாவது ஆப்பிரிக்காதேசத்தின் சில பாகங்களிலும், இந்துதேசத்தின் சில நாடுகளிலும் இருப்பதுபோல், பாஷையில் உள்ள ஒவ்வொரு அசைக்கும் ஒவ்வொரு குறியை ஏற்படுத்தினர். அப்புறம் அவைகளும் பாஷையைக் கற்போருக்கும் வாசிப்போருக்கும் வருத்தமானவைகளென்றறிந்து, அக்ஷரங்களை இருகுறியாய் ஏற்படுத்தி, அவைகளை உயிர், மெய் எனும் இரு பெரும்பிரிவுகளாய்ப் பிரித்து, அவற்றைப் பலவாறு தொடரச்செய்வதால் வரிவடிவான பதங்களுண்டாய், அப்பதங்கள் சேர்ந்து வரிவடிவுப்பாஷை உண்டாயிற்று. இவ்வாறு தனிதொனிகளுக்கு அறிகுறியாக அக்ஷரங்களை முதலாவது உபயோகப்படுத்தினவன் இவனென்று திட்டமாய்த் தெரியாது. ஆயினும் பிளேட்டோ என்னும் கிரேக்கஞானி சொல்லுகிறபடி, எகிப்தனாகிய தியூத் என்பவன் ஏற்படுத்தினதாய்த் தோன்றுகிறது. பிறகு காட்மஸ் என்பவன் அவ்வக்ஷரங்களை எகிப்திலுள்ள தீப்ஸ்நகரத்திலிருந்து பேனிக்கியதேசத்திற்கும், அப்புறம் அவ்விடத்திலிருந்து கிரேக்கதேசத்திற்கும் கொண்டுபோனான். அவன் 16 எழுத்துக்களைமாத்திரம் வழங்கினான். பிற்காலத்தில் வேறு சில எழுத்துக்களும் சேர்க்கப்பட்டன. இக்காலத்தில் ஐரோப்பாவில் வழங்கிவரும் ரோமை எழுத்துக்களும், பூர்வீக கிரேக்கை எழுத்துக்களும், எபிரேய, சமாரித்த, பேனிக்கிய எழுத்துக்களும் வடிவத்திலும் போக்கிலும் வெகுவாய்ச் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அசீரியர், பேனிக்கியர், அராபியர், எபிரேயர் எனும் பூர்வீகஜாதியார் எழுத்துக்களை வலதுபக்கம் துவக்கி இடதுபக்கமாய் எழுதிக்கொண்டுவந்தனர். கிரேக்கரும் முதன்முதல் அப்படி எழுதினதாய்த் தோன்றுகிறது. பிறகு அவர்கள் வலதுபக்கம் துவக்கி இடதுபக்கமாய் எழுதி, அப்புறம் இடதுபக்கம் துவக்கி வலதுபக்கமாய் எழுதி, இப்படியே உழுகிற மாட்டைப்போல் மாறிமாறி எழுதினார்கள். சப்தஞானிகளில் ஒருவனாகிய ஸோலனுடைய காலத்துக்குப்பின் இக்காலத்து வழக்கப்படியே இடதுபக்கம் துவக்கி வலதுபக்கமாகவே எழுதிக்கொண்டுவந்தார்கள். அக்ஷரங்கள் முதன்முதல் தூண், கற்பலகை, இயத்தகடு முதலியவற்றில

வெட்டப்பட்டன; அப்புறம் ஓலைகளிலும், மரப்பட்டைகளிலும், மெழுகால் மூடப்பட்ட மரப்பலகைகளிலும் எழுத்தாணியால் எழுதப்பட்டன. பிறகு மெருகிடப்பட்ட தோல்களில் எழுதப்பட்டன. 14-ம் நூற்றாண்டுக்குப்பின் காகிதங்களில் எழுதப்பட்டுவருகின்றன.

பூலோகத்திலுள்ள வசிக்கும் மனிதஜாதிகள் பேசும் பாஷைகளெல்லாம் மூன்று அல்லது நான்கு கிளைப்பாஷைகளுள் அடங்கும். இவைகளுக்குள் சீனம் முதலிய ஓரசைப்பாஷையும், எபிரேயு முதலிய சேமியபாஷையும், சமஸ்கிருதத்தையும் ஐரோப்பாதேசத்துக்குரிய பாஷைகளையும், திராவிடபாஷைகளையும் அடக்கிய இந்து ஐரோப்பியபாஷையுமே விசேஷமானது. சமஸ்கிருதம் பூர்வீகபாஷைகளில் ஒன்றுமாய், தனக்கேயுரிய பதங்களையன்றி பிறபாஷைக்குரிய பதங்களை மிகுதியும் ஏற்காது அறிவுக்குரிய அநேக விஷயங்களை அடக்கியதுமாய் இருக்கிறது. சமஸ்கிருதத்திலிருந்து 900 பகுதிகளுக்கு அதிகமாய் கிரேக்கை, லத்தீன்பாஷைகளிலும், ஐரோப்பியபாஷைகளிலும் அமைந்திருக்கின்றன. திராவிடபாஷைகளிலும் சமஸ்கிருத பதங்களில் அநேகம் வந்து வழங்குகின்றன.

சீனா, ஆப்பிரிக்கா, அமெரிக்காதவிர, மற்ற மனிதர் பேசும் பாஷைகள் எல்லாம் இலக்கணவிஷயம் நோக்கி சேமிய, ஆரிய, துரேனியபாஷைகளென்ப பெயரினவாகும் கிளைப்பாஷைகளுள் அடங்குமென்று மக்ஸ்முல்லர் வித்வான் சொல்லுவர். அவர் பாஷைகளுக்குப் பூர்வபருவம், மத்திமபருவம், உத்தமபருவம் எனும் மூன்று நிலைகள் உண்டென்பர். பூர்வீக சீனபாஷையைப்போல் ஓர்அசைப் பதங்களாலாயது பூர்வபருவம். விகாரமொன்று அர்த்தங்கொள்ளும் துரேனியபாஷையைப்போல் இரண்டு பதங்கள் கூடி, ஒன்று [illegible]பதமாயும், மற்றது விகாரமடைந்து விகுதியாயும் புணர்கிறது மத்திமபருவம். சமஸ்கிருதபாஷையைப்போல் பதங்கள் ஒன்றோடொன்று கலந்து ரூபம் பிறண்டு மருவியிருப்பது உத்தமபருவம். இக்காலத்துப் பாஷைகளில் அநேகம் இந்த மூன்று பருவங்களும் கலந்துள்ளனவைகள். ஆஸ்திரேலியர், யாப்பான், மலாய, சையாம், தாகலை, பின்லாண்டு முதலிய தேசங்களில் வழங்கும் பாஷைகளும், இந்ததேசத்திலுள்ள திராவிடபாஷைகளும், துரேனிய கிளைப்பாஷைகளுள் அடங்கும். இக்காலத்தில் இந்ததேசத்தில் வெகு பிரபலியமாய் அபிவிர்த்தி செய்யப்படும் அங்கிலேயபாஷை, ஆரிய துரேனியபாஷைகளை அடக்கிய இந்து ஐரோப்பியபாஷையின் கிளைப்பாஷைகளில் ஒன்றாகிய காதியபாஷையின் உட்பிரிவுகளில் ஒன்றாகிய தியூத்தானியபாஷையைச் சேர்ந்த கீழ்ஜெர்மானியபாஷையின் ஓர் அங்கமாயிருக்கிறது. திராவிடபாஷைகளில் ஒன்றாகிய தமிழ்ப்பாஷை இந்து ஐரோப்பியபாஷையில் அடங்கிய துரேனியபாஷையைச் சேர்ந்தது. ஆகவே, அங்கிலேயபாஷையும் தமிழ்ப்பாஷையும் இந்து ஐரோப்பியபாஷையில் அடங்கியிருக்கின்றன. இவ்விஷயங்கள் பின்வரும் அட்டவணையைக் கவனிப்பதால் தெளிவுற விளங்கும்.

பாஷை.



Note.—ஆரிய ஈரேனியபாஷைகள் இந்து ஐரோப்பியபாஷையில் அடங்குமென்றறிக

உலகத்திலுள்ள விசேஷித்த பாஷைகளுக்கெல்லாம் இலக்கணம் உண்டு. பாஷையுண்டாயிருக்கும் விதத்தையும், பாஷைக்குரிய விதிகளையும் தெளிவுற உதாரணங்களோடு எடுத்துக்காட்டுகிறதற்கு இலக்கணம் என்று பேர். பாஷைக்குரிய பொதுவிஷயங்களை வெளிப்படுத்தி அதற்குரிய பொதுவான இலக்கண விஷயங்களையும் உண்டாக்குவது ஆவசியமே. பாஷை உண்டாவதற்கு மூலகாரணம் பதங்கள்; அப்பதங்கள் பொதுப்படப் பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும். முதன்முதல் மனுஷர் பாஷை பேசத் தொடங்கின காலத்தில் தங்கள் புலன்களுக்குத் தென்பட்ட வஸ்துக்களுக்குக் காரணம் நோக்கியும் நோக்காதும் பல சிறப்புப்பெயர்களையிட்டனர். அவற்றைக் காரணப்பெயர் என்றும், இடுகுறிப்பெயர் என்றும் இலக்கணிகள் கூறுவர். அவர்கள் பாஷை பேசுவதில் சற்று அதிக அப்பியாசம் அடைந்தபின், ஒப்புமை நோக்கிய பல பொருட்களை ஒரு பொதுப்பெயரில் அடக்கிக்கூறினர். இவ்விதமாகப் பொதுப் பெயர்ச்சொற்கள் உண்டாயின. பிறகு தமக்குப் பழக்கமான பல பொருட்களிலிருந்து வேறுவேறாகப் பிரித்துக்காட்டச் சுட்டுச்சொற்களையும், சில பாஷைகளில் தோற்றப்பொருளிலும், பிரிநிலைப்பொருளிலும் வரும் இடைச்சொற்களையும் வழங்கினர். கிரேக்கப் பாஷையில் ஏழு இடைச்சொல்லும் பெயர்ச்சொற்களுக்குமுன் பிரிநிலைப் பொருளில் வழங்கின. தமிழ்ப்பாஷையில் அந்த இந்த முதலிய விசேஷணச் சுட்டுச்சொற்களும், பிரிநிலைப்பொருளிலும் தோற்றப்பொருளிலும் வழங்கும் ஏ முதலிய இடைச்சொற்களும் வரும்.

பிறகு பொருட்கள் ஒன்றோ பலவோவென்று காட்ட, ஒருமை பன்மையில் பெயர்களுக்கு இலக்கணங்கூறியும், அவை ஆணோ பெண்ணோவென்று காட்ட ஆண்பாலிலும் பெண்பாலிலும் இலக்கணங்கூறியும், பொருட்களுக்கிருக்கும் சம்பந்தங்களை எடுத்துக்காட்ட அவைகளுக்கு வேற்றுமைகளில் இலக்கணங் கூறியும் வந்தனர். கிரேக்கு, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளில் முதன்முதல் மனிதர் ஒன்று, இரண்டு, அநேகம் என்று எண்ணினதாலன்றோ இரண்டு வஸ்துக்களை மாத்திரம் குறிக்கும் துவித எண் உண்டாவதற்கு ஏதுவிருந்தது. லத்தீன், கிரேக்க பாஷைகளில் பெயரின் இறுதிமாத்திரம் கவனித்து, உயிரில்லாத வஸ்துக்களைக் குறிக்கும் பெயர்களையுங்கூட ஆண்பாலிலும் பெண்பாலிலும் கூறிவந்தனர். இது பாஷையின் வழக்கமேயொழிய, நியாய இலக்கணமுறையன்று. பிராஞ்சு, இத்தாலிய பாஷைகளில் பெயர்ச்சொற்களுக்குமுன் சில இடைச்சொற்களை வைத்து, அவைகளை ஆண்பாலிலும் பெண்பாலிலும் மாத்திரம் வைத்து இலக்கணங்கூறுவர். ஆங்கிலேயபாஷையிலும், சமஸ்கிருதபாஷையிலும் அலிப்பால் (நபும்சகலிங்கம்) என்று ஒன்றைச் சேர்த்து, ஆண் பெண் எனப் பகுக்கக் கூடாத வஸ்துக்களை அதில் அமைக்கின்றனர். தமிழ்ப்பாஷையில் உயர்திணை அஃறிணையில் சகல பெயர்களையும் அடக்கி, உயர்திணைக்கு ஆண், பெண், பலர் என்னும் மூன்று பாலும், அஃறிணைக்கு ஒன்று பலவென்னும் இருபாலும் உண்டென்பர். தமிழ்ப்பாஷையிலும், ஆங்கிலேயபாஷையிலும் உயிரற்ற வஸ்துக்களை உயிர் உள்ளனபோற் பாவித்து, உவமானோபமானமாய் ஆண்பாலிலும் பெண்பாலிலும் வைத்துப் பேசுவதை வழுவமைதியாகக் கொள்ளுவர். அப்படியே,

புகழேந்திப் புலவர்:

வெங்கதிரோன் றானும் விசும்பென் றிருமடந்தை
மங்கலநாண் காண வருவான்போல — செங்குமுதம்
வாயடங்க மன்னற்கு வருகிக்கும் கன்னெருநில
சேயடங்க ஏறினான் தேர் என்றும்,

சொத்துக்கள் பார்ப்பார் அற்றுக்கிடந்ததி[illegible]மித்தம் வெகு சேதப்பட்டுப்போயினவென்று கண்டு பரிதபித்தார்கள்.

உதாரமான கொடை.—கலாஸ்ஜி ஜிஹா[illegible] செடிமணி என்னும் ஓர் பார்ஸியப்பிரபுவானவர், பார்ஸிய பாலியஸ்திரீகளுக்குக் கல்வி பயிற்றும்பொருட்டுத் தமது சொந்தச் செலவில் கெடவாடில் வித்தியாசாலை ஒன்றை ஸ்தாபித்திருக்கிறார். இவர் [illegible] சோபகாரார்த்தமாய் இப்பாடசாலையின்பொருட்டு முன்னும் பின்னுமாகக் கொடுத்த திரவி[illegible] ரூபாய் 30,000.

ஐரோப்பிய யுத்தம்.—[illegible] பட[illegible]ள்ள யுத்தம் இன்னும் முடியவில்லை. [illegible]ருஷியர் [illegible] அநேக ஜயங்கள் அடைந்து, பிரான்ஸியரைச்சேர்ந்த அநேக அரண்களைப் பிடித்துத் தங்கள் கைவசமாக்கி, பிரான்ஸிய சேனைகளில் இலட்சக்கணக்கான யுத்தவீரரைச் சிறைகளாக்கிக்கொண்டு, கடைசியில் அவர்கள் ராஜதானியாகிய மகா மாட்சிமை தங்கிய பாரிஸ்நகரத்தையும், பின்னும் சில முக்கியமான பட்டணங்களையும் முற்றிக்கைசெய்திருக்கிறார்கள்; ஆகிலும் பிரான்ஸியர், தங்களுக்கு நேரிட்ட இத்தனை அபஜயங்கள் நஷ்டங்களினால் சற்றேனும் அதைரியப்படாமல், மகா அதிசயிக்கத்தக்க வீரதீரத்தோடு இன்னும் தங்கள் சத்துருக்களை எதிர்த்[illegible]றார்கள். காரியம் எப்படி முடியுமோ தெரியவில்லை. [illegible]த்தில் முடிவுதெரியும்போலிருக்கிறது.

ஆகாயவாகன யாத்திரை.—பிரான்ஸியருடைய ராஜதானியாகிய பாரிஸ்நகரத்தைப் புருஷியசேனைகள் முற்றிக்கைசெய்திருக்கிறபடியால், அந்நகரவாசிகளுக்கும் வெளியிடங்களிலுள்ள பிரான்ஸியருக்கும் சமாசாரப் போக்குவரவு உண்டாயிருக்கும்பொருட்டு, ஆகாயமார்க்கமாய்ப் பறந்துபோகும் புகைக்கூண்டு[illegible]கள் அல்லது வாயுக்கூண்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளின் வழியாகத் தபால்கடிதங்கள், சமாசாரப்பத்திரிகைகள் முதலியவை ஆகாயமார்க்கமாய்ப் போய்வருகின்றன. பிரயாணிகளும் அவைகளில் ஏறி யாத்திரைசெய்கிறார்கள்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY